# 103. பிள்ளைத்தமிழில் இயற்கைவாழ்வியல்

திருமதி ந.தமிழரசி
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
நல்லமுத்துகவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி, தமிழ்நாடு, இந்தியா

முனைவர் ஆ.மகாலட்சுமி
நெறியாளர் உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
நல்லமுத்துகவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி, தமிழ்நாடு, இந்தியா

**ஆய்வுச்சுருக்கம்**

இறைவன் உயிர்களுக்குத் தந்தபரிசே இயற்கை. மனிதர்கள் தோன்றுவதற்கு முன்பே இயற்கை தோன்றிவிட்டது. இந்த இயற்கையை மனித வாழ்வில் இருந்து தனியாகப் பிரித்துப் பார்க்க இயலாது. மனிதர்கள் இயற்கையைப் போற்றி நன்றாக வாழவேண்டும் என்ற வகையிலேயே மனிதனுக்காக இயற்கை படைக்கப்பட்டது. நாகரீகம் வளரத் தொடங்கிய பின் இயற்கையைப் பாதுகாக்க வேண்டிய மனிதனே அவற்றை அழிக்கத் தொடங்கினான். இதனால் இயற்கையும் தனது கோபத்தை கடல் கோள்களாக,எரிமலைச் சீற்றங்களாக, சூறாவளியாக, பேரிடர்களாக வெளிப்படுத்தியது. மனிதன் இயற்கைக்கு எதிராக செயல்படும் போது தனது வாழ்வையும் அதுபாதிக்கும் என்பதை உணரவேண்டும். பழங்காலமக்கள் இயற்கையைப் பாதுகாத்துப் போற்றினர். தனக்கு மீறிய ஒருசக்தி உண்டு என்றும், அது இயற்கையே என்பதையும் உணர்ந்து அவற்றை வணங்கினர். இதற்கான சான்றுகள் சங்க இலக்கியங்களிலும் காணக்கிடக்கின்றன. கொங்கு நாட்டைச் சார்ந்த சிற்றிலக்கியங்களில் ஒன்றான அருள் தருமுயங்கு பூண்முலை வல்லியம்மை பிள்ளைத்தமிழ் என்ற நூலில் இடம்பெற்றுள்ள இயற்கையின் கூறுகளை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

**முன்னுரை**

இயற்கை என்பது இயல்பானது. மனித சக்தியின் துணையின்றி தானே தோன்றிய பொருள்கள் அனைத்தும் இயற்கை எனப்படும். மனிதர்களும் இயற்கையின் ஒருபகுதியே ஆவர். மற்ற இயற்கை நிகழ்வுகளில் இருந்து மனிதனின் நடத்தைகள் முற்றிலும் வேறுபட்ட தனியான ஒரு பிரிவென்று பெரும்பாலும் கருதப்படுகிறது. இயற்கை என்பது நம்மைச் சுற்றியுள்ள அனைத்து உயிருள்ள மற்றும் உயிரற்றனவாகிய பொருள்கள் ஆகும். மனிதனால் செயற்கையாக உருவாக்கபடாதவையே இயற்கையாகும். இயற்கையானது மனிதர்களுக்கு மட்டுமின்றி ஓரறிவு முதல் ஆறறிவு உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் பொதுவானது என்பதை உணர்ந்து அக்கால மக்கள் வாழ்ந்து வந்தனர். அதனால் அனைத்து உயிரினங்களின் செயல்பாடுகளும் ஒன்றை ஒன்று பாதிக்காத வகையில் நடைபெற்றுக் கொண்டு வந்தன. மனிதர்கள் அறிவியல் வளர்ச்சியால் இயற்கையை ஆராயத் தொடங்கி, அதற்கு எதிராகச் செயல்படத் தொடங்கியபோது இயற்கையானது அழிவை நோக்கிச் சென்று மக்களையும் அழிக்கத் தொடங்கியது. மனிதர்கள் பூமியில் வாழ்வதற்காக படைக்கப்பட்ட இயற்கையை பாதுகாக்க வேண்டும் என்ற சிந்தனையை ஒவ்வொருவர் மனதிலும் உருவாக்கி, இயற்கையைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். தமிழில் தோன்றிய இலக்கியங்கள் பெரும்பாலும் இயற்கையோடு இணைந்த வாழ்வியலைக் கூறும் பொருண்மையிலேயே அமைந்துள்ளது. அவ்வகையில் கொங்கு நாட்டில் அமைந்துள்ள திருமுருகன் பூண்டி திருமுருகநாதப் பெருமான் உடனமர் இறைவிமீது அருள் தருமுயங்கு பூண்முலைவல்லியம்மை என்ற நூல் பாடப்பட்டுள்ளது. இந்நூலில் மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த முறைகளையும், இயற்கையைப் போற்றிக் காத்த நிகழ்வுகளையும் ஆராயும் பொருண்மையில் இக்கட்டுரையானது அமைந்துள்ளது.

**பூமியின் தோற்றம்**

பிரபஞ்சத்தில் எண்ணற்ற கிரகங்கள் இருந்தாலும் மனிதனும் மற்ற உயிரினங்களும் வாழ்வதற்குத் தேவையான இயற்கைவளங்கள் நிறைந்தது பூமி மட்டுமேயாகும். பூமியின் தோற்றம் குறித்து டாக்டர் புரட்சிதாசன் ''பூமியில் உயிர்கள் இல்லாதகாலம் அசோயிக் எனப்படும். அளவிடமுடியாத வெப்பம் நீராவியாக உருகி, சுழன்ற பூமியின் உட்பகுதியிலிருந்து திரள் மிகுந்தனவாகவும், திரள் குறைந்தனவாகவுமுள்ள பொருள்கள் பூமியின் மேற்பரப்பிற்கு வந்தன. அடர்த்தி மிகுந்த யுரேனியமும், அவை குறைந்த அலுமினியமும் கலந்து கரைந்த கூட்டுப் பொருள் பூமியின் புறப்பகுதியில் வடிந்தது. அவை நிலப்பரப்பாகியது. அவற்றை கிழித்து வெளியிடப்பட்ட எரிமலையும் குளிர்ந்து பாறைகளாக ஆயின. பின்னர் அவைகளே பூமியின் உயர்ந்த நிலப்பரப்பாயின"(டாக்டர் புரட்சிதாசன் கொடுங்கடல் கொண்ட குமரிக் கண்டம், பக்கஎண். 14) என பூமியின் தோற்றம் குறித்துக் கூறுகின்றார். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற ஐம்பூதங்களால் ஆன இயற்கையே உலகமாகும் என்பதை,

"நிலம்தீநீர்வளிவிசும்போடுஐந்தும்
கலந்தமயக்கம் உலகம் ஆதலின்
இருதிணைஐம்பால் இயல்நெறிவழாஅமைத்
திரிவுஇல் சொல்லொடுதழாஅல் வேண்டும்"
(தொல்காப்பியம் பொருளதிகாரம் மரபியல் - நூற்பா -1589)

என்று உலகின் தோற்றம் குறித்துத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். ஐம்பூதங்களையும் உலகில் இருந்து தனியே பிரித்துப் பார்க்க இயலாது என்பதையும் இயற்கையை ஒட்டியே மனித வாழ்வானது அமைந்திருந்தது என்பதையும் இந்நூற்பாவின் வாயிலாகஅறியமுடிகிறது.

இயற்கைவழிபாடு

ஐம்பூதங்களையும் மக்கள் மாசுபடுத்தாமல் பாதுகாக்கவேண்டும் என்றநோக்கிலேயே இயற்கையைமக்கள் வணங்கத் தொடங்கினர். அவற்றைக் கடவுளாக எண்ணி வழிபாடும் செய்துவந்தனர் என்பதை,

"நிலனாய் புனலாய் கனலாய் நிதமாய் வதியும் நிமலமே
நிலையாய் வளியாய் வெளியாய் நிறமாய் விளையும் நியமமே"
(அருள்தருமுயங்குபூண்முலைவல்லியம்மைபிள்ளைத்தமிழ் பாடல் -59)

என்று குறிப்பிடுகிறார். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய எட்டு வடிவில் நிலையாக தங்குகின்றவள் முயங்கு பூண்முலைவல்லியம்மை ஆவாள். இயற்கையை இறையாக எண்ணி வழிபடும் போது இயற்கையானது பாதுகாக்கப்படும் என்பதை அறிய முடிகிறது.

**சூரியனை அசுரர்கள் கவர்தல்**

உலகில் உயிர்கள் வாழவானிலிருந்துதனது இன்றியமையாத இயற்கையான ஒளியைச் சூரியன் பூமியில் விழச் செய்கிறது. அத்தகையசூரிய ஒளியைஅசுரர்கள் கவர்ந்துசென்றனர் என்பதை,

"வானின் றொளிதரும் வாள் ஞாயிறு
வானின் அசுரர் வாள்கவர்ந்திட
வானநிறம்புரைவாணீலன்
வாய்மைகண்ணன் நீட்டினான்"
(அருள்தருமுயங்குபூண்முலைவல்லியம்மைபிள்ளைத்தமிழ்,பாடல் -22)

என்ற வரிகளில் குறிப்பிடுகிறார். பின்பு கவரப்பட்ட சூரியனை கண்ணன் மீட்டியதாக புறநானூற்று பாடல் ஒன்றும் குறிப்பிடுகிறது. பிறரை வருத்தும் அச்சத்தினை உடைய அசுரர் கூட்டம் தேவர்களுடன் போர் செய்த போது ஞாயிற்றைக் கொண்டு சென்று மறைத்தனர். சேய்மைக்கண் விளங்குகின்ற ஞாயிற்றை காணாமையால் இருள் சூழ்ந்து உலகத்தாரின் கண்ணைமறைத்தது. வட்டமாகிய உலகத்தின் நோய் கொண்டுதுன்பம் நீங்கும் படிமிக்க வலிமையும் கண்மை போலும் நிறம் கொண்ட திருமேனியையுடைய கண்ணன் ஞாயிற்றைமீட்டுவந்து இவ்வுலகின் இருள் நீங்கும் படிஆகாயத்தில் நிறுத்தினான்.இதை,

"அணங்குடைஅவுணர் கணம் கொண்டுஒளித்தென
சேண் விளங்குசிறப்பின் ஞாயிறுகாணாது
இருள் கண் கெடுத்தபருதிஞாலத்து
இடும்பைகொள் பருவரல் தீர,கடுந்திறல்
அஞ்சனஉருவன் தந்துநிறுத்தாங்கு"
(புறநானூறு பாடல் 174)

என்ற பாடல் வரிகளில் மாறோக்கத்து நப்பசலையார் குறிப்பிடுகிறார். தனக்குத் தானே நிகர் என்ற தன்மையை உடைய சூரியனின் கதிர்கள் இன்றி உலகில் உயிர்கள் வாழ இயலாது. தன்னிடம் உள்ள ஒளிக் கதிர்களை பூமியின் மீது விழவைத்து உயிர்களை வாழவைக்கும் சூரியனைக் கடவுளாக வழிபட்டு வரும் வழக்கம் இன்றும் நடைமுறையில் உள்ளது. தைமாதத்தின் முதல் நாளானதைப் பொங்கல் அன்று சூரியனை வழிபட்டுப் பொங்கல் வைத்து நன்றி செலுத்தும் விதமாக சூரியப் பொங்கல் கொண்டாடப்பட்டு வருகிறது. சூரியனின் கதிர்கள் அதிகாலையில் உடலில் படும்போது விட்டமின் டி சக்தியை கொடுக்கிறது. அதன் காரணமாகவே காலையிலும் மாலையிலும் சூரிய நமஸ்காரம் என்ற ஆன்மீக உடற்பயிற்சியை பலரும் பின்பற்றி வருகின்றனர். பூமியில் உயிர்கள் வாழ்வதற்கான இன்றியமையாத ஆற்றல் மூலமாக விளங்குவது சூரியன் என்பதை அறிய முடிகிறது.

**நிலம்**

நிலம் என்பது ஓரிடத்தில் நிலையாக இருக்கும் பகுதியாகும். நிரந்தரமாக நீரில் மூழ்காத திண்மப் பரப்பாகும். மனிதனின் பெரும்பாலான செயல்பாடுகள், வேளாண்மை, வாழிடங்கள் போன்ற அனைத்தும் நிலப்பரப்பிலேயே

அமைந்துள்ளது. நிலம் என்ற பெயர்ச் சொல்லை பற்றி இராம. இருசுப்பிள்ளை,“நிலம் என்றசொல் உலகைக் குறிக்க பயன்படுத்தப் பட்டுள்ளது. நிலம் என்ற சொல்லானது நில் என்ற வேர்ச்சொல் அடியாகப் பிறந்த பெயர்ச்சொல். உயிரினங்கள் நிற்பதற்கு இடமாக உள்ளது இந்த உலகம் ஆதலால் இதனை நிலம் என்றனர்” (இராம.இருசுப்பிள்ளை, தமிழ்ச்சொற்கள் காட்டும் தொன்மையும் மேன்மையையும், பக்கஎண் -16) என்று கூறுவதன் வாயிலாக நிலமானது உயிர்கள் வாழ்வதற்கான இருப்பிடமாகும் என்பதை உணர முடிகின்றது. சங்ககாலத்தில் நிலங்களை திணை அடிப்படையில் பிரித்தனர் என்பதை,

‘மாயோன் மேயகாடுறைஉலகமும்
சேயோன் மேயமைவரைஉலகமும்
வேந்தன் மேயதீம்புனல் உலகமும்
வருணன் மேயபெருமணல் உலகமும்
முல்லைகுறிஞ்சிமருதம் நெய்தல் எனச்
சொல்லியமுறையால் சொல்லவும் படுமே”

(தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் நூற்பா- 951)

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். முருகன் குறிஞ்சிநிலக் கடவுளாகவும், திருமால் முல்லை நிலக் கடவுளாகவும், இந்திரன் மருதநிலக் கடவுளாகவும், வருணன் நெய்தல் நிலக் கடவுளாகவும் அமைந்துள்ளதை தொல்காப்பிய நூற்பாவாயிலாக அறிய முடிகிறது. ஒவ்வொரு திணைக்கும் ஒருவழிபடு கடவுள் அமைந்துள்ளதால் மக்கள் அந்த நிலத்தைக் கடவுளாக எண்ணிப் பாதுகாப்பர். அந்தந்த நிலத்து இறைவனோடு இயற்கையையும் இணைத்து வழிபடுவர் என்பதை அறிய முடிகிறது.

**கொங்குநாட்டுநிலச் சிறப்பு**

ஒவ்வொருநாடும் ஒருதனிச்சிறப்பினைப் பெற்று இயற்கைத் தன்மையோடுதிகழ்ந்ததுஎன்பதை,

‘வேழமிகுந்ததுசேரர் இருந்ததுவேலைவந்தேநந்தூரும்
வாலையரசுசெய் வாள்முத் தொளிசெய் வீலை நின்றே வென்றேறும்
சோழர் அரசுசெய் சோறுதருவதுதோயம் இங்கோபங்காரும்
சோதிமலைமிசைதோன்றல் தொழுதிடுசோகந் தங்காபொங்காரும்
ஆழ அறிவுடைஆன்றோர் செறிந்திடும் காஞ்சிஎன்றோர் தொன்றூரும்
ஏகன் உடனமர் ஏகை இடனமர் ஏர்கொங் கென்றோர் நன்றேயம்"

(அருள்தருமுயங்குபூண்முலைவல்லியம்மைபிள்ளைத்தமிழ் பாடல் -21)

என்று குறிப்பிடுகிறார். கடற்கரையோரம் சங்குகள் ஊர்ந்து வரும் சேரநாடு யானைகளை மிகுதியாக உடையது. மீனாட்சி ஆட்சி செய்கின்ற முத்துக்கள் ஒளிசெய்யும் பாண்டியநாடு 64 திருவிளையாடல்களை நிகழ்த்தி வெற்றி கொண்டநாடு. சோழர்கள் ஆட்சிசெய்யும் சோழநாடு சோறுடையது. இங்கு காவிரியாறு பலவாறு பிரிந்து செல்லும். நடுநாட்டில் சோதி மலையாகிய திருவண்ணாமலையை உடையது. இப்பதியை வணங்கினால் நம்முடைய வினைகளெல்லாம் நீங்கும். நுட்பமான அறிவுடையோர் நிறைந்திருப்பது காஞ்சி என்னும் ஊர் உடைய தொண்டை நாடு. ஒருவனிடத்தில் இருக்கின்ற ஒருத்தியாக அம்மையப்பராக இறைவன் அமர்ந்திருக்கும் கொங்குநாடு அழகு மிகச்சிறந்த நல்ல நாடு என்று குறிப்பிடப்படுகிறது. சேரநாட்டின் ஒருபகுதியாக இருக்கக்கூடிய கொங்குநாடு பருக்கைக் கற்களை உடைய மேட்டு நிலம் என்பதை,

“சேண் பரல் முரம்பின் ஈர்ம் படைக் கொங்கர்
ஆ பரந் தன்னசெலவின்,பல்
யானைகாண்பல்,அவன் தானையானே."

(பதிற்றுப்பத்துபாடல் -77 (10-12)

என்ற வரிகளில் அரிசில் கிழார் குறிப்பிடுகிறார். கொங்கு நாட்டில் உள்ளவர்கள் ஏராளமான பசுக்களை உடையவர்கள் என்பதால் சேரமன்னனின் யானைப் படையுடன் ஒப்பிட்டு கொங்கர்களின் பசுக்கள் கூறப்பட்டுள்ளது.

**கொங்குநாட்டில் உழவுத்தொழில்**

கொங்குநாட்டில் உள்ள உழவர்கள் இயற்கையோடு இணைந்த உழவுத் தொழிலை செய்கின்றனர் என்பதை,

“உழுக்குமுநன்றார்ந்தஒன்றினர் தாமாய் ஊரேபோகாமே
உழைத்துழைத் தங்கீண்டிநின்றவர் ஒடாய் தாமேயாகாமே”

(அருள்தருமுயங்குபூண்முலைவல்லியம்மைபிள்ளைத்தமிழ் பாடல் -28)

என்று குறிப்பிடுகிறார். கொங்கு நாட்டு மக்கள் உழவுத் தொழிலை ஒன்றுகூடி செய்தனர். இயற்கையானது பொய்த்தாலும் உழவுத் தொழிலை விடாமல் செய்து வந்தனர் என்பதை உணரமுடிகிறது. நீர் நிறைந்த பொய்கைகளில் மீன்கள் துள்ளி குதித்தன. நெற்கதிர்கள் எல்லாம் முற்றி விளைந்து காற்றினில் சாய்ந்து ஆடும் காட்சி கண்களுக்கு விருந்தாக அமைந்தது. உழவர் பெருமக்கள் அரிவாள் கொண்டுவயலில் முதிர்ந்தநெல் அறுக்க அவர்களின் வளமிக்க தோள்களில் சுமந்து அவர்களின் தோளும் நிலமும் நெல் மணம் வீசியது என்பதை,

**"கயமாண்டநீர்நிலையில் கயிலுகளும் அக்காலத்து**
**கதிர்விளைந்துநெல்முற்றிக் காற்றினில் சாய்ந்தே**
**கண்மகிழச் சதிராடும் காட்சியுண் டக்காலத்து**
**குயமாண்டநல்லுழவர் வயல்மாண்டநெல்லறுக்கக்**
**குலவுதோள் வளமணக்கநிலமணக்குமக்காலத்து**
**கூடிமகிழ் மக்கள்தாம் கொண்டாடுவர் அக்காலத்து"**

**(அருள்தருமுயங்குபூண்முலைவல்லியம்மைபிள்ளைத்தமிழ் பாடல் -44)**

என்ற வரிகளில் குறிப்பிடுகிறார்.மேலும் முத்துக்கள் பிறக்கும் இடங்கள் பற்றி,

**"முத்துபிறந்திடுமுளரி மூங்கிலேமுட்டவந்திடுமே**
**முற்றும் கரும்பது,கமுகுமேகமோட்டத்தித் தந்தமதே**
**அத்தம் அகன்றிடும் நளினம் ஆனமே,அத்திக் கொம்பதுவே**
**அத்தைதனந்தனக் கழியும், மூங்கிலேஅப்புயங்கழிமே"**

**(அருள்தருமுயங்குபூண்முலைவல்லியம்மைபிள்ளைத்தமிழ் பாடல் 51)**

என்று குறிப்பிடுகிறார். தாமரை, விளைந்த மூங்கில், முற்றியகரும்பு, கமுகு, மேகம், யானைத் தந்தம் முதலியவற்றில் முத்துக்கள் பிறக்கும் என்று குறிப்பிடப்படுகிறது. கடலில் மட்டுமன்றி கொங்கு நாட்டில் நிலப்பரப்பிலும் முத்துக்கள் கிடைக்கும் என்று கூறுவதன் மூலமாக கொங்கு நாட்டின் உழவுச் சிறப்பை அறிய முடிகிறது.

**திருமுருகன் பூண்டிநிலச்சிறப்பு**

தென்னை மரங்களும், கம்பும், தினையும்மிக்க வளர்கின்ற காடுகள். தெளிவான நிறைந்த ஒளியும் வரியையும் உடையகற்கள். சங்கிலியும், நீண்ட ஒளியும் நிறைந்த தொழிற்சாலைகள். அடியார்கள் ஒருங்கிணைந்து வாழ்கின்ற இடம் நிறைந்தது திருமுருகன்பூண்டி என்பதை,

**"தெங்குநிறைகம்புவளர் இங்குமிகுதெண்ணீர்வயல்**
**தெளிவானநெளிவானஒளியானஉயர்கற்கள்**
**தேன்மிகுகான்மிகுமான்மிகுமாமரக்காடு**
**சங்கினொலிவங்கினொலிபொங்குமொலிதொழிற்சாலை**
**சங்கமர் அங்கமர் பங்கமில் சங்காந்தம்"**

**(அருள்தருமுயங்குபூண்முலைவல்லியம்மைபிள்ளைத்தமிழ் பாடல் -49)**

என்ற வரிகளில் குறிப்பிடுகிறார். மேலும் திருமுருகன் பூண்டி மரங்கள் சூழ்ந்த இயற்கையான பகுதி என்பதை,

**"வளவினில் வெட்சியும் வண்மலர் வகுளமும்**
**வளவிதழ்க் கொன்றையும் பிடவொடுவள்ளையும்**
**வழையும் குருந்தும் வளையும் கோடலும்**
**தளவினிதழைத்திடும் தன்பூண்டிநகரினில்"**

**(அருள்தருமுயங்குபூண்முலைவல்லியம்மைபிள்ளைத்தமிழ் பாடல் - 6)**

என்றவரிகளில் குறிப்பிடுகிறார். செழுமைமிகுந்தவெட்சி,தட்பம் மிகுந்தமகிழம், நல்ல இதழ்களைக் கொண்ட கொன்றை, பிடா, வள்ளை, சுரபுன்னை, குமுதம், காந்தள், முல்லை ஆகியவை இனிதாகத் தழைக்கும் இயற்கை வளம் மிக்கதுதிருமுருகநாதப்பெருமான் திருக்கோயில் அமைந்துள்ள திருமுருகன் பூண்டியாகும். பலவகையான மருத்துவ குணம் கொண்ட மரங்களை மக்கள் வெட்டி அழிக்கக் கூடாது எனும் நோக்கில் மகத்துவம் வாய்ந்தமரங்கள் பெரும்பாலும் தலவிருட்சங்களாகவும், கோயில் மரங்களாகவும் வளர்க்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பதை அறிய முடிகிறது.

**தண்ணீரின் அடையாளஅட்டை**

தண்ணீர் குறித்த அறிவியல் செய்தியாகஎன். ஸ்ரீனிவாசன் கூறும்பொழுது,

"பெயர் : தண்ணீர்

வயது : 370 முதல் 400கோடிஆண்டுகள்

பிறப்பிடம் : பூமியின் மேற்தோட்டை அடுத்து உள்ளமாண்டில் பகுதி

இருப்பிடம் : நீர்நிலைகள் தென்,வடதுருவங்கள் உயர்ந்தமலைச்சிகரங்கள் வழி கோலம் நிலத்தடியில்

முகவரி : நீர்க்கோளம்

நிலைகள் : திரவம், ஆவி, ஐஸ்-பொதுவாகதிரவவடிவம்- நிறமற்றது,மணமற்றது, சுவையற்றது." (ஸ்ரீனிவாசன் புவி,காற்று,தண்ணீர் பக்களண் -100) என்று குறிப்பிடுகிறார்.

## கொங்குநாட்டில் பாயும் ஆறுகள்

நிறம், மணம், சுவை ஆகிய எக்குணமுமற்ற இயற்கை வளங்களுள் அரியது நீராகும். உலகில் தோன்றிய ஒவ்வொரு உயிரினங்களும் ஏதோ ஒருவகையில் நீரின் தேவையைப் பெற்றவண்ணமே உள்ளன. அவ்வகையில் கொங்கு நாட்டில் காவிரிநதி, அமராவதிநதி, நொய்யல் ஆறு, பவானி ஆறு, எல்லோராலும் விரும்பப்படும் காஞ்சிமாநதி, மீன்கள் துள்ளி விழும் சண்முகநதி, அழகு பொருந்திய பாம்பாறு, வரட்டாறு, வசிட்டாநதி, பூமியில் விரிந்து செல்கின்ற தென்பெண்ணை, புனல்கரைநதி, சனற்குமாரநதி, பூவலைநதி, சுவேதாநதி, பூமணம் வீசும் பூகம்பை ஆறு,பெரியாறு,நல்லாறு, பூந்தொப்பையாறு, பொலிவினை உண்டாக்குகின்ற நதியாகிய மிகவும் விரிந்த சிறுவாணி ஆறு,வெள்ளியங்கிரியில் இருந்துவரும் நீலியாறு,மன் சரபங்கநதிஎனும் புனிதநதி, நறுமணம் வீசும் அழகிய மணிமுத்தாறு, பொன்னியாறு போன்ற எண்ணற்ற ஆறுகள் பாய்வதை,

"காவிரிஆன்பொருநைகானொய்யல்,காம்பவானி,
காஞ்சியெனும் வாஞ்சைமிகுநதி
கயலுகளும் சண்முகநதி,காமருவும் பாம்பாறு,
காவரட்டாறு,வசிட்டாநதி
பூவிரிதென்பெண்ணை,புனல்கரைநதி,சனற்குமரப்
பூவலைநதி,சுவேதாநதி,
பூமணக்கும் பூகம்பை,பெரியாறு,நல்லாறு
பூந்தொப்பை,பொலிவுசேர்நதி
மாவிரிசிறுவாணி,மாவெள்ளிநீலியாறு,
மண்சரபங் கப்புனிதநதி
மருமணக்கும் திருமணிமுத்தாறு,பொன்னியாறு
மாகொங்குசேர் மேநதிகளில்
(அருள்தருமுயங்குபூண்முலைவல்லியம்மைபிள்ளைத்தமிழ் பாடல் - 89)

என்ற வரிகளில் குறிப்பிடுகிறார். இத்தகைய ஆறுகள் பாய்வதால் கொங்கு நாட்டின் உழவுத்தொழிலும் சிறப்புற்று இருந்தது என்பதை அறிய முடிகிறது. மேலும் ஆறுகளில் புதுப்புனல் வரும் பொழுதுமக்கள் அவற்றைக் மகிழ்ந்து கொண்டாடினர் என்பதையும் அறியமுடிகிறது.

## புதுப்புனல்

பருவமாற்றங்களின் காரணமாக மழைப்பொழிந்து ஆற்றில் புது வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். அதை வரவேற்கும் விதமாக மகிழ்ச்சி பொங்க நீராடி மகிழ்வது புனலாட்டு விழாவாகும். சங்ககாலத்தில் இதைப் புதுப்புனல் விழா என்று அழைத்தனர். தற்காலத்தில் இதை ஆடிப் பெருக்கு எனமக்கள் கொண்டாடி வருகின்றனர். தினைக்கதிர்கள், முத்தின் மணிகள், நவமணிகளை இரு பக்கங்களிலும் முறையாக இருந்து வீசி எறிந்து, வேகமாகநீர் பெருக்கெடுத்து ஓடிவர ஆடவரும் பெண்டிரும் மகிழ்ச்சியாக புது புனல் ஆடியசெய்தியை,

"இங்குகதிர் முத்தினொடும் இனமணிகள்
உந்தியெழில் முந்துநிறைமுறையினொடும்
எறிந்துவீசிமுறிந்தவலைபுரிந்தபுனல்
மங்கையரும் மைந்தர்களும் மகிழ் பொங்கு
மண்ணுபுனல் தனித்தனிகுடைந்தாட
(அருள்தருமுயங்குபூண்முலைவல்லியம்மைபிள்ளைத்தமிழ் பாடல் -90)

என்று குறிப்பிடுகிறார். மழைபெய்ததன் காரணமாக அருவிகளில் நீர் பெருக்கெடுத்து பலவகையான மூலிகைச் செடிகளையும், நறுமணமிக்க மலர்களையும் வெள்ளமானது அடித்துக் கொண்டுவரும். அத்தகைய நீரில் நீராடும் போது பலவகையான நோய்கள் நீங்கும் என்ற வகையிலேயே புதுப்புனல் ஆடும் வழக்கம் கொண்டாடப் பட்டது. மக்கள் தற்காலத்தில் அருவிகளில் நீராடுவதும் இதன் காரணமாகவே ஆகும் என்பதை உணரமுடிகிறது.

**புதுப்புனலில்நீராடுவோர்**

ஆற்றில் நீராடுவோரில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக நீராடுவர். தேன் பொருந்திய மலர்களைச் சூடிய கூந்தல் அவிழ்ந்து விழநீரில் மூழ்கி மூழ்கி கரை சேர்வார் சிலர். காந்தள் மலர் போன்ற கை விரல்கள் வருந்தும் வண்ணம் விரைவாக ஓடும் நீரில் படிவோர் சிலர். கருங்குவளை மலர் போன்றகண்கள் சிவக்கும் படி ஆடவரும் பெண்டிரும் புதுப்புனல் ஆடினர். ஆற்றின் குறுக்கே புகுந்து நீராடி உடல் வருந்தி துன்புற ஒருசிலர். ஆற்றுநீரின் உள்புகுந்து படிந்து தேடுவோர் சிலர். ஆற்றங்கரை ஓரத்தில் நின்று நீராடுவதை பார்த்து மகிழ்வோர் சிலர். கரையில் நிற்போரை ஆற்றுக்குள் தள்ளி விடுவோர் ஒருசிலர் எனபலரும் பலவாறுநீரில் குளித்து இன்புறுகின்றனர் என்பதை,

"நள்ளாற்றுப் புனல்பெருகநம்பியரும் நங்கையரும்
நறுமணப் பூமிதக்கஉறுமணக் குழல் மணக்க
நன்குட்புகுந் துகுடைந்துகுடைந்தாடுவோர்சில்லோர்
கள்ளாற்றுங் கூந்தலவிழ மூழ்கி மூழ்கிக் கரைசேர்சிலர்
காந்தட்கைவிரல்வருந்தக் கடும்புனலில் படிவோர்சிலர்
கருங்குவளைக் கண்சிவப்பக் குளித்தெழுவோரங்குசிலர்"

(அருள்தருமுயங்குபூண்முலைவல்லியம்மைபிள்ளைத்தமிழ் பாடல் -91)

என்ற பாடலில் குறிப்பிடுகிறார். இவ்வாறாக ஆற்றில் எண்ணற்ற மக்களும் நீராடி மகிழ்ந்ததை அறிய முடிகிறது. உயிர்கள் வாழ அடிப்படைத் தேவைநீர். அந்தநீரினை போற்றும் விதமாகவும், வணங்கி வாழ்த்தும் விதமாகவும் இவ்விழாவானது கொண்டாடப்பட்டு வருகிறது. இயற்கையை அக்காலத்து மக்கள் வணங்கியதையே இப்புனலாட்டு விழா மெய்ப்பிக்கிறது.

**உவமை அடிப்படையில் தீ**

ஐம்பூதங்களில் ஒன்றானதீயும் மக்களின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாகும். நெருப்பு பழைய கற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அக்கால மனிதன் சிக்கிமுக்கிக் கற்களை உரசி நெருப்பைக் கண்டுபிடித்தான். அதைக் கொண்டு விலங்குகளை பயமுறுத்தினான். தற்போது அன்றாட வாழ்விலும் நெருப்பின் தேவையானது இன்றியமையாததாகி விட்டது. மக்கள் உணவு சமைக்கவும், குளிர்காலங்களில் நெருப்பு மூட்டி குளிர் காயவும், ஆலயங்களில் இறைவனுக்கு யாகங்கள் செய்வதற்காகவும், இரவு நேரங்களில் வெளிச்சத்திற்காகவும் நெருப்பைப் பயன்படுத்தி வருகின்றனர். திருமணம் போன்ற சுபகாரியங்களிலும் நெருப்பை முதன்மைப் படுத்தி சடங்குகளும் செய்யப்படுகின்றன. இத்தகைய நெருப்பை கடவுளாகவும் வழிபடுகின்றனர். சிவபெருமானே நெருப்புக் கடவுளாக விளங்குகிறார் என்பதை,

"அக்கினிநிறத்தன் அக்கினிகரத்தன்
அக்கினிகணை யுடையன்
அடையார் புரத்தை அக்கினி ஆக்கியவன்
அக்கினிமலைமகிழ்பவன்
அக்கினிஆற்றினன் அக்கினிஆடினான்
அக்கினிசடைநிறத்தன்"
(அருள்தருமுயங்குபூண்முலைவல்லியம்மைபிள்ளைத்தமிழ் பாடல் -87)

என்று குறிப்பிடுகிறார். தீ போன்று செம்மை நிறம் உடையவன். தீயைக் கையில் ஏந்தியவன். தீ பொருந்திய அம்பினை உடையவன். பகைவர்கள் ஆகிய மூத்தவர்களை தீக்கு இரையாக்கிய திருவண்ணாமலையில் விரும்பி உறைபவன். மகாசங்கார காலத்தில் உலகங்களை எல்லாம் எரித்துத் துகள்களை தன்மீது பூசிக் கொண்டவன். தீ வண்ணச் சடாமுடி உடையவன் சிவபெருமான் ஆவார். சிவபெருமானை முக்கண்ணன் என்றும் தீக்கடவுள் என்றும் குறிப்பிடப்படுவதால் நெருப்புடன் ஒப்பிட்டு கூறப்பட்டுள்ளது. இத்தகைய தீயை ஒரு காதலியாக, தோழனாக, இறைதூதனாக வரித்து எழுதி மகிழ்ந்தவர் பாரதியார்.நெருப்பு பற்றிய தமது கவிதையில்,

"நீசுடுகின்றாய்இநீவருத்தந்தருகின்றாய்இ
விடாய்தருகின்றாய்இசோர்வுதருகின்றாய்இ
பசி தருகின்றாய்இ
இவை இனியன"

பாரதியார் வசனக்கவிதைகள்,ஞாயிறு :4)

என்று குறிப்பிடுகிறார். நெருப்பானது நம்மை சுட்டாலும், வருத்தத்தைத் தந்தாலும், சோர்வைத் தந்தாலும் இனியது என்பதை அறிய முடிகிறது. நமது உடலுக்கும் தேவையான அளவு வெப்பம் தேவை. அத்தகைய வெப்பம்

இன்றி உடலில் பசி உணர்வும் ஏற்படாது. செரிமானமும் ஏற்படாது. நெருப்பே இரையாகவும், இறையாகவும் உள்ளதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

கொங்கு நாட்டுமக்கள் இயற்கையோடு இணைந்த வாழ்வியலை மேற்கொண்டனர். அவர்களின் வழிபாட்டு முறைகளும் இயற்கையை ஒட்டியே அமைந்திருந்தது. நீர்வளம் குறைவாக இருக்கும் வேளையிலும் உழவுத் தொழிலை மேற்கொண்டு வந்தனர் நீரை போற்றியும் வணங்கியும் வழிபட்டும் வந்ததை அறிய முடிகிறது. இயற்கையை போற்றி வளர்த்தால் அவை நம்மை வாழ்விக்கும் என்பதையும் அவற்றை அளித்தால் மனித இனம் அழிவை நோக்கி செல்லும் என்பதையும் உணர்ந்து மனிதன் தன் வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்பதை அறிய முடிகிறது. இயற்கையாக அமைந்த ஒரு பொருளை மட்டுமே கொண்டு மனிதர்கள் உலகில் உயிர் வாழ முடியாது பூதங்களான நிலம் நீர் காற்று நெருப்பு ஆகாயம் இவற்றில் ஒன்று இல்லைஎன்றாலும், அவற்றில் ஒன்று தனது நிலையிலிருந்து மாறினாலும் மனிதர்களால் வாழமுடியாது. அவை அனைத்தும் அதனதன் நிலைப்பாட்டில் இருப்பதே நன்மை பயக்கும் இயற்கையின் இத்தகைய நிலைப்பாட்டை அனைவரும் உணர்ந்து இயற்கையிலும் வாழ்விற்கு நாமும் நன்றாக வாழ்ந்து வருங்கால தலைமுறைகளையும் இயற்கையோடு இணைந்த வாழ்வை வாழவைக்க வழிவகை செய்ய வேண்டும்.

**தொகுப்புரை**

1. பூமியின் தோற்றம் பற்றி தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள செய்தியையும், அசுரர்கள் ஞாயிற்றை கை கொண்டு மறைத்த செய்தியும் கூறப்பட்டுள்ளது.
2. நிலங்களை திணை அடிப்படையில் பிரித்த செய்தியும் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒருதனிச் சிறப்பு உண்டு என்பதைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.
3. இயற்கையானது ஒத்துழைக்காத வேளையிலும் கொங்கு நாட்டு மக்கள் உழவுத் தொழிலை விடாது செய்தனர் என்பதையும்,கொங்கு நாட்டிலுள்ள பசுக்களை சேரமன்னர்களின் யானைப் படையோடு ஒப்பிட்டு கூறப்பட்டுள்ள செய்தியையும் அறிய முடிகிறது.
4. நீரின் தேவையை உணர்ந்து நீரைப் போற்றும் விதமாக புதுப்புனல் ஆடப்பட்டதையும், திருமுருகன் பூண்டியின் சிறப்பு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.
5. உலகிற்கும் உடலுக்கும் நெருப்பும் இன்றியமையாதது என்பதை அறிய முடிகிறது.

**துணைநூல் பட்டியல்**


1. பதிப்பாசிரியர்கள் முனைவர் அ.மா.பரிமணம், முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன், புறநானூறு மூலமும் உரையும், முதல் பதிப்பு ஏப்ரல் 2004, நியூ செஞ்சுரிபுக்ஹவுஸ் அம்பத்தூர் சென்னை -600 098.
2. இராம இருசுப்பிள்ளை, தமிழ்ச் சொற்கள் காட்டும் தொன்மையும் மேன்மையும்,முதல் பதிப்பு 2008 வேம் அச்சகம், துடியலூர், கோவை.
3. டாக்டர் புரட்சிதாசன், கொடுங்கடல் கொண்ட குமரிக்கண்டம், முதல் பதிப்பு-1997, பாண்டியன் பாசறை, தி.நகர், சென்னை.
4. உரையாசிரியர் முனைவர் ஆ.ஆலிஸ், பதிற்றுப்பத்து மூலமும் உரையும், ஆறாம் பதிப்பு அக்டோபர் 2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை-600 098.
5. முனைவர் இரா சென்னியப்பனார், அருள்தருமுயங்குபூண்முலைவல்லியம்மை பிள்ளைத்தமிழ், முதல்பதிப்பு-2004, அருள்மிகு திரு முருகநாதசுவாமி அறக்கட்டளை, திருமுருகன் பூண்டி.
6. முனைவர்ச.வே.சுப்பிரமணியம்,தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம்- 31,சிங்கர் தெருபாரிமுனை, சென்னை - 600108.
7. பதிப்பாசிரியர் எம.சாதிக் சபியா,பாரதியார் கவிதைகள், மூன்றாம் பதிப்பு, ஜனவரி-2019, கிளாசிக் பப்ளிகேஷன்ஸ்,12, பிரகாசம் சாலை, பிராட்வே, சென்னை-108.